Y.M.C.A வாசிக

Registered as a News Paper in Sri Lanka. பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ ஆனி மீ 21 ஆம் உ வியாழக்கிழமை (05 - 07 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஜ் 11 ஓசை 137

## அம்பாறையில் மேலும் ஐம்பத்தியேழு தமிழர் இராணுவத்தால் படுகொலை

(அம்பாறை)

சம்மாந்துறைப் பகுதியில் கடந்த இருபத்தைந்தாம் திகதி எண்பத்தைந்து தமிழ் பேசும் மக்களையும் இம்மாதம் முதலாம் திகதி ஐம்பத்தேழு தமிழ்பேசும் மக்களையும் சிறிலங்கா படையினர் சுட்டும், வெட்டியும் கொன்றுள்ளனர். (எல்லாமாக 155 பேர்) மேலும் நீலாந்தனை, சவளக்கடை ஆகிய இடங்களில் 26ஆம் திகதியும், 30ஆம் திகதியுமாக பன்னிரெண்டு தமிழ் பேசும் மக்களை கொன்றுள்ளனர். சொறிக் கல்முனை எனும் இடத்தில் மூன்று தமிழ்ப் பெண்களை சிறிலங்கா இராணுவத்தினர் பாலியல் வன்முறைக்குள்ளாக்கியுள்ளனர். அதே பகுதியில் பதினைந்து வீடுகளையும் தீமூட்டி எரித்துள்ளனர். அம்பாறை மாவட்டத்தில் வானேரி எனும் இடத்தில் மாடுமேய்த்துக் கொண்டிருந்த முகைதீன் பாவா, அகமது லெப்பை என்பவரையும் அகம்மது (4ஆம் பக்கம் பார்க்க)

# ஓடுவதால் அழிவைத் தடுக்கமுடியாது; மானத்துடன் வாழ நிதிமட்டும்போதாது; வீட்டுக்கொரு இளைஞனும்தேவை

## -மகேந்திரராசா



(கோப்பாய்)

எமது இனத்தைப் பாதுகாக்க எமது இனத்தை வாழ வைக்க எம்முடன் சேருங்கள் என்று கேட்கிறோம். புலம் பெயர்ந்து ஓடுவதால் அழிவிலிருந்து தப்பமுடியாது. அழிப்புச்சத்தியால் அழிக்கப் படுவது எமது இனம். மரணங்கள் பயனுடையதாக இருக்கவேண்டும். நாம் வீரத்துடன் போராடிக் கௌரவத்துடன் வாழ விரும்புகிறோம் எனவே மானத்துடன் வாழுங்கள். இறக்கும் பொழுது மானத்துடன் இறக்க வேண்டும் என்றே கூறுகின்றோம். எனவே தமிழீழ மீட்பு நிதிக்கு உதவி செய்ய நீங்களும் பங்காளிகளாக ஆக வேண்டும்'', என்று நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நேற்றுக் காலை நடைபெற்ற தமிழீழ மீட்பு நிதி சேகரிப்பு நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ மகேந்திரராசா (மாத்தயா) கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

சிற்றூர் அவைத் தலைவர் அ. பூதத்தம்பி நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.

கோ. மகேந்திரராசா தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:-

இந்த மண் எமக்குச் சொந்தம. ஆகவே தமிழ் பேசும் (4ஆம் பக்கம் பார்க்க)

# செஞ்சிலுவைப் பிரதிநிதி மீது பலாலியில் இராணுவம் சூடு

## 260 படையினர் மரணம் 450 பேர் காயம்

(கொழும்பு)

கடந்த மூன்று வாரங்களாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இடம் பெற்றுவரும் யுத்தத்தில் இதுவரை 260 படையினரும், பொலிசாரும் கொல்லப்பட்டுள்ளதாக இலங்கை பாதுகாப்பு வட்டாரம் அறிவித்துள்ளது.

இந்த மோதலில் பொலிஸ் படையைச் சேர்ந்த 640 பேர் காணாமல் போய்விட்டதுடன் 450 பேர் காயமடைந்துள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திலகரெட்னா சென்ற பின்பும் இனப்படுகொலை நிற்கவில்லை

## மயிரிழையில் உயிர் தப்பியவரை புலிகள் பாதுகாத்து அனுப்பினர்

யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலையத்தில் தமது சகாவை வரவேற்கச்சென்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியை நோக்கி பலாலி இராணுவ முகாமிலிருந்த சிறிலங்கா இராணுவம் திடீரெனத் துப்பாக்கிப்பிரயோகம் செய்தது. சுவிற்சலாந்துக்காரரான அந்த செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி தாம் சென்ற வாகனத்தின்கீழ் விழுந்து படுத்து உயிரை மயிரிழையில் காப்பாற்றிக் கொண்டார்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து பலாலி விமான நிலையத் ... செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியையும், அவருடன் ... மீட்டுக் கொண்டுவரப்பட்ட அதே செஞ்சிலுவைச் சங்க ...

## தமிழருக்கு உணவும் மருந்தும் உதவ வேண்டும்

### இந்திய அரசுக்கு பாரதீய ஜனதாக்கட்சி ஆலோசனை

(சென்னை)

''பட்டினி கிடக்கும் வடக்கு கிழக்கு தமிழ் மக்களை காப்பாற்றும் வகையில் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்துக்குஊடாகவோ அல்லது இலங்கை அரசுடனான ஒரு உடன்பாட்டின் அடிப்படையிலோ உணவுப்பொருட்க (4ஆம் பக்கம் பார்க்க)

## அத்தியாவசியப் பொருட்களை அனுப்புவதில் அக்கறை இல்லை

(யாழ்ப்பாணம்)

தற்போது எமது பகுதியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் கலந்துரையாடலொன்று நேற்று நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடலில் உதவி அரசாங்க அதிபர்களும்; அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இங்கு பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அரசின் குறைபாடுகள் பற்றியும் சுட்டிக் காட்டப்பட்டன.

யாழ். அரசாங்க அதிபர் யாழ். மாவட்டத்திற்கு உடனடியாகத் தேவைப்படும் அத் (4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். போதனா வைத்தியசாலை சனிக்கிழமை இயங்கலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை மீண்டும் ... மூடப்பட்டுள்ளது. இவ் வைத்திய சாலை மூடப்பட்டதன் (4ஆம் பக்கம் பார்க்க)

# 260 படையினர் மரணம் 450 பேர் காயம்

(கொழும்பு)

கடந்த மூன்று வாரங்களாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இடம் பெற்றுவரும் யுத்தத்தில் இதுவரை 260 படையினரும், பொலிசாரும் கொல்லப்பட்டுள்ளதாக இலங்கை பாதுகாப்பு வட்டாரம் அறிவித்துள்ளது.

இந்த மோதலில் பொலிஸ் படையைச் சேர்ந்த 640 பேர் காணாமல் போய்விட்டதுடன் 450 பேர் காயமடைந்துள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மயிரிழையில் உயிர் தப்பியவரை புலிகள் பாதுகாத்து அனுப்பினர்

யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலையத்தில் தமது சகாவை வரவேற்கச்சென்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியை நோக்கி பலாலி இராணுவ முகாமிலிருந்த சிறிலங்கா இராணுவம் திடீரெனத் துப்பாக்கிப்பிரயோகம் செய்தது. சுவிற்சலாந்துக்காரரான அந்த செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி தாம் சென்ற வாகனத்தின்கீழ் விழுந்து படுத்து உயிரை மயிரிழையில் காப்பாற்றிக் கொண்டார்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து பலாலி விமான நிலையத்துக்குச்செல்லஅனுமதியளித்த வசாவிளான் சந்தியிலுள்ள விடுதலைப்புலிப்போராளிகள் முன்சென்று வாகனத்தை விட்டுவிட்டு வந்த செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியையும், அவருடன் துணைக்குச் சென்றவரையும் பதுங்கு குழி வழியாக மீட்டுக் கொண்டு வந்தனர்.

சிறிது நேரம் பதுங்கு குழியில் ஓய்வெடுத்த பின்னர் விடுதலைப்புலிப் போராளிகளால் மீட்டுக் கொண்டுவரப்பட்ட அதே செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் யாழ்ப்பாணம் திரும்பினர்.

செஞ்சிலுவைச் சங்க இலச்சணை பொறிக்கப்பட்டிருந்த வாகனத்தில் செஞ்சிலுவைச் சங்கக் கொடியும், பெரிய

(4ஆம் பக்கம் பார்க்க)

# அத்தியாவசியப் பொருட்களை அனுப்புவதில் அக்கறை இல்லை

(யாழ்ப்பாணம்)

தற்போது எமது பகுதியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் கலந்துரையாடலொன்று நேற்று நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடலில் உதவி அரசாங்க அதிபர்களும்: அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இங்கு பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அரசின் குறைபாடுகள் பற்றியும் சுட்டிக் காட்டப்பட்டன.

யாழ். அரசாங்க அதிபர் யாழ். மாவட்டத்திற்கு உடனடியாகத் தேவைப்படும் அத்

(4ஆம் பக்கம் பார்க்க)

# திலகரெட்னா சென்ற பின்பும் இனப்படுகொலை நிற்கவில்லை

(சென்னை)

**- வாழப்பாடி**

''இலங்கை வெளியுறவு அமைச்சின் செயலர் திரு. பெனாட் திலகரெட்ன டில்லி வந்து பேச்சுக்கள் நடத்திய தன் பின்பும், இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் இனப்படுகொலைகளில் எவ்வித மாற்றமும் ஏற்பட்டதாக தெரியவில்லை'' என்று தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு வாழப்பாடி இராமமூர்த்தி கண்டனம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில்

# இராணுவம் தொடர்ந்து வெறியாட்டம்; தமிழர்களை மனித கவசமாகப் பாவிப்பு

(திருக்கோணமலை)

சிங்கள இராணுவத்தின் வெறியாட்டம் திருகோணமலை மாவட்டத்தில் உச்ச நிலையைக் கண்டு வருகிறது ஏற்கனவே அகதிகளாக ஆக்கப்பட்டவர்கள்மீது மீண்டும் மீண்டும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது.

தம்பலகாமம் பகுதியில் ஏற்கனவே அகதிகளாக்கப்பட்ட தம்பலகாமம் பகுதியில்தஞ்சம் அடைந்திருந்த சுமார் நானூற்றைம்பதுக்கும் அதிகமான தமிழ் பேசும் மக்களைப் பிடித்து மனித கவசமாக்கிக் கொண்டு சூரன்கல் என்னும் இடத்தை நோக்கிமுன்னேறிய ஸ்ரீலங்கா படையினர் தாம்

(4ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். போதனா வைத்தியசாலை சனிக்கிழமை இயங்கலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை மீண்டும் எதிர்வரும் சனிக்கிழமை இயங்க ஆரம்பிக்கும் என நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

வடபகுதியில் அனைத்து வசதிகளையும் கொண்ட, சுமார் ஆயிரம் படுக்கைகளையும் கொண்ட யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை கோட்டை ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் தாக்குதல்கள் காரணமாக அண்மையில் மூடப்பட்டுள்ளது. இவ் வைத்திய சாலை மூடப்பட்டதன்

(4ஆம் பக்கம் பார்க்க)

# கொக்காவிலில் இராணுவம் பலி

(யாழ்ப்பாணம்)

கொக்காவில் இராணுவ முகாமில் காவல் அரணில் நின்ற சிப்பாய்க்கு உணவு வழங்கித் திரும்பிய சிப்பாய்கள் மீது விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்த

(4ஆம் பக்கம் பார்க்க)

# எல்லைப்புற கிராமங்களில் சிங்கள காடையர் கொள்ளை

(வவுனியா)

வவுனியாவிற்கு தெற்கே தமிழ் எல்லைக் கிராமங்களில் தமிழ் மக்களின் விளை பொருட்களை இராணுவத்தினருடன் இணைந்து சிங்களக் காடையர்கள் அபகரித்து வருகின்றனர்.

ஆசிகுளம், மூன்று முறிப்பு, தச்சன் குளம் போன்ற கிராமப் பகுதிகளில் இந்த அபகரிப்பு வேலை தொடர்ந்து இடம் பெற்று வருகிறது.

தமிழ் மக்களின் விளை பொருட்களை வேண்டுமென்றே சிங்களக் காடையர்கள் அபகரிப்பதற்கு இராணு

(4ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா நகரில் அநாதரவான சடலங்கள்

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதியில் அநாதரவான நிலையில் சடலங்கள் காணப்படுவதாகநேரில் கண்டவர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா அரசாங்க அதிபரின் இல்லத்திற்கு அண்மையிலும் வவுனியா புதிய பஸ் நிலையப் பகுதியிலும் அநாதரவான நிலையில் சடலங்கள் காணப்படுவதாகவும் இவை உருக்குலைந்த நிலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் வவுனியா குருமன்காடு பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மலசலகூடப் பகுதியில் சூட்டுக்காயங்களுடன் சடலம் ஒன்று காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது

மேற்படி பகுதிகளில் இராணுவத்தினரின் நடமாட்டம் அதிகளவில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க கடந்த 28ஆம் திகதி வியாழக்கிழமை இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலுக்குச்சிக்கிவவுனியா விவசாயப் பாடசாலையில் உள்ள மாடுகளில் இரண்டு இறந்தன மேலும் ஒருமாடு கால் ஒன்றை இழந்தது. (தி)

# வரதன் வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

வசாவிளானில் நேற்று ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற கடும்மோதலில் திருமலையைச் சேர்ந்த வரதன்வீரமரணமானார். அவருக்கு விடுதலைப் புலிகள் வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.

# அகதிகள் மீது இராணுவம் சூடு காடையர் வெட்டு

(யாழ்ப்பாணம்)

புடவைககட்டிலிருந்து கால் நடையாக வந்த அகதிகளை புல்மோட்டையில் வழிமறித்து ஸ்ரீ லங்கா இராணுவச்சிப்பாய்களும் சிங்களக்காடையர்களும் கத்தியால் வெட்டியுள்ளனர். சிப்பாய்கள் அகதிகளை நோக்கி துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொண்டார்களாம்

பயத்தினால் காட்டுக்குள் ஓடிய அகதிகள் என்னவானார்கள் என்பது பற்றிய தகவல் ஒன்றும் தெரியவில்லை எனத் தப்பி வந்த ஒருவர் தெரிவித்தார்.

# செயலக கட்டிடம் சேதம் இயங்க முடியவில்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி செயலக கட்டிடத்தின் பெரும் பகுதி உடைந்திருப்பதனால் அலுவலகம் மீண்டும் இயங்க முடியாதுள்ளது.

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நகர்மீது மேற்கொண்ட தாக்தல்களினால் கிளிநொச்சி அலுவலகக் கட்டிடம் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளது. இதனால் மீண்டும் அலுவலகம் அவ்விடத்தில் தொடர்ந்து இயங்கமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதனால் இவ் அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. (ம)

# வடக்குக் கிழக்கில் இம்முறை ஹஜ் பெருநாள் இல்லை

(யாழ்ப்பாணம்)

முஸ்லிம்களின் ஹஜ்ஜுப் பெருநாள் வடக்குக் கிழககுப் பகுதிகளில் இம்முறை நடைபெறவில்லை

முஸ்லிம்கள் அதிகமாகவாழும் மன்னார், மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களில் அவர்களும் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் சிலபள்ளிவாசல்களில் அமைதியாகசமய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

# 17 ஸ்ரெச்சர்கள் தயார்; கோட்டைத் தேவைக்கு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டைக்குள் தங்கி இருக்கும் காயமடைந்த இராணுவ வீரர்களை அங்கிருந்து தரைமார்க்கமாகப் பலாலிக்கு எடுத்துச் செல்ல 17 ஸ்ரெச்சர்களை (நோயாளிகளைப் படுக்க வைத்துத் தூக்கும் கட்டில்கள்) யாழ். ஆஸ்பத்திரியில் இருந்து ஏற்பாடு செய்துவைக்குமாறு யாழ்ப்பாணத்தில் தங்கி உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுக்கு நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) காலை 10 மணியளவில் கொழும்பிலிருந்து வந்த செய்தி ஒன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது.

காயமடைந்த இராணுவ வீரர்களை அங்கிருந்து அழைத்துச் செல்ல சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் அரசு விடுத்த வேண்டுகோளுக்கு விடுதலைப் புலிகள் ஏற்கனவே இணக்கம் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

நேற்றுக்காலை குறிப்பிட்ட இராணுவ வீரர்களை அழைத்துச் செல்வதென ஏற்பாடாகி இருந்தபோதிலும் கொழும்பிலிருந்து வரவேண்டிய சர்வ

(4ஆம் பக்கம் பார்க்க)

## இன்று மில்லர் நினைவுநாள்

(யாழ்ப்பாணம்)

இன்று (5-7-90) நெல்லியடி ஸ்ரீலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதலின்போது வீர மரணமடைந்த கரும்புலி கப்டன் மில்லர், (வசந்தன் துன்னாலை), மேஜர் கமல் (பரமேஸ்வரராஜா வல்வெட்டித்துறை), வின்சென்ட் (தவராசா நெடுங்

(4ஆம் பக்கம் பார்க்க)

# திலகரெட்னாவால் இந்தியாவை திருப்திப்படுத்த முடியவில்லையாம்

(டில்லி)

இலங்கையில் தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் குறித்து இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள சீற்றத்தைத் தணிக்கும் வகையில் டில்லி சென்றுள்ள வெளியுறவுச் செயலர் திரு.பெர்னாட் திலகரெட்னாவின் முயற்சிகள் இலங்கை அரசுக்கு தோல்வியில் முடிந்துவிட்டதாக இந்திய அரசியல் வட்டாரங்கள் அறிவித்துள்ளன

நேற்று 4ஆம் திகதி புதன் கிழமை வெளிவந்த தினமணி நாளேட்டில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு அடைந்துள்ள இந்தத் தோல்விக்கு இங்கு நடைபெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகளில் பாகிஸ்தான், இஸ்ரேல் ஆகிய நாடுகளின் உள்ளீடு பற்றிய பிரச்சினையே காரணமென்றுக் கூறப்படுவதாகவும் அந்த நாளேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த நாளேட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: பாகிஸ்தான், இஸ்ரேல் ஆகிய நாடுகளால் இலங்கை

(4ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

## காணவில்லை

து.அண்ணுத்தாய், பிறிஸ்கா ஆகிய இருவரையும் 28-6-90 அன்றிலிருந்து காணவில்லை. கண்டவர்கள் தயது செய்து கீழுள்ள விலாசத்திற்கு அறியத்தரவும். S. புலேந்திரன், 15/6 நியூ கொலனி, திருநெல்வேலி, கோப்பாய். தகவல்:- ராஜா ஸ்ரோர்ஸ், வவுனியா.

(R/392)

## பண்டங்கள் யானை விலை

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் சில்லறை, மொத்த விற்பனை நிலையங்களில் பண்டங்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமிருக்கின்றன. குறிப்பாக அத்தியாவசியப் பண்டங்கள் யானை விலை விற்கின்றன.

யாழ் நகரில் ஒரு மூடை மா ரூ. 2,100 ஆக விற்பனையாகிறது. ஒரு கிலோ சீனி ரூபா 40 வரை சில்லறை விலையில் விற்கப்படுகின்றது.

சிங்களத் தலைவர்கள்

## ஏமாற்றியதன் விளைவே அரசு - புலிகள் யுத்தம்

(யாழ்ப்பாணம்)

நாட்டைப் புதிய பாதையில் முன்னெடுத்துச் செல்வேன் என்று புறப்பட்ட ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அவர்கள் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவைப் போன்றே தமிழ் பேசும் மக்களுக்கெதிராக யுத்தப் பிரகடனம் செய்துள்ளார். இந்த யுத்தத்தின் மூலம் பெரும் எண்ணிக்கையில் தமிழ் பேசும் மக்களின் உயிர்களைப் பறித்தும் மக்களின் பொருளாதாரம், கலாசாரம் ஆகியவைகளை அழித்தும் அரசு வெற்றிபெற விரும்பினால் நிச்சயம் அரசு தோல்வியையே தழுவும்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசக் கமிட்டியின் சார்பில் அதன் காரியதரிசி எம். எ. சி. இக்பால் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் இப்படிக் கூறியுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழ் தேசிய இனத்தின் மீது மீண்டும் ஒரு யுத்தத்தைத் தொடுத்த பிரேமதாசா அரசின் பேரினவாத நடவடிக்கைகளுக்கெதிராக தமிழ் பேசும் மக்கள் ஐக்கியப்படவேண்டும்.

யுத்த விமானங்கள் மூலம் பல நூறு பாரிய வெடிகுண்டுகளை வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வீசுவதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை முறியடித்து விடலாம் என்று அரசு கனவு காணுகிறது. முதலாவது பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா தொடக்கம் இன்றைய ஜனாதிபதி பிரேமதாசா வரை காலத்துக்குக் காலம் பதவிக்கு வந்த சிங்களத் தலைவர்கள் தமிழ் தலைவர்களையும், தமிழ் பேசும் மக்களையும் ஏமாற்றி வந்ததன் விளைவே இன்று நடைபெறும் அரச - புலிகள் யுத்தமாகும்.

ஆகவே அரசு தமிழ் பேசும் மக்கள் மேல் தொடுத்த யுத்தத்தை உடன் நிறுத்த வேண்டும். தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## தமிழினம் பட்டினியால் சாவை எதிர்நோக்குகின்றது

- பொன் மதிமுகராசா

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பிரதேசங்களுக்குப் பொருளாதாரத் தடை செய்து கொழும்பிலிருந்து வருகின்ற அத்தியாவசிய உணவுப் பண்டங்கள், எரிபொருள், மருந்து வகைகள் ஸ்ரீலங்கா அரசினால் அனுப்பப்படுவதில்லை. உணவுப் பற்றாக்குறைவால் பஞ்சம் தலைவிரித்தாடி தமிழினம் பட்டினியால் சாவை எதிர்நோக்குகின்றது.

அண்ணா தி. மு. கழகத்தின் தலைவர் பொன் மதிமுகராஜா அ. இ. அ. தி. மு. கழகப் பொதுச் செயலாளர் புரட்சித் தலைவி ஜெயலலிதாவுக்கு எழுதிய கடிதத்தில் இப்படிக் குறிப்பிட்டுள்ளார்.

கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

நச்சுத் தன்மை பொருந்திய 250 கிலோ எடையுள்ள குண்டுகளைப் போர் விமானங்களிலிருந்து உருட்டி விடுகின்றபடியால் பல ஆயிரக் கணக்கான மக்கள் சாவை எதிர்நோக்கிக் கொண்டிருக்றார்கள்.

எமது இனம் சுதந்திரமாக வாழ, விடுதலை பெற்ற தமிழ் ஈழத்தில் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க தமிழகத்தில் இருக்கும் அனைத்துக் கட்சிகளும் அரசியல் நோக்கு இல்லாது எமது நியாயமான போராட்டத்தை உலக அரங்கிற்கு, தமிழ் நாட்டு மக்களுக்கு குறிப்பாக இந்திய மக்களுக்கு அறியப்படுத்துவது புரட்சித்தலைவரின் கொள்கையைத் தாங்கிய தமிழ்நாட்டின் மக்கள் சக்தியாக விளங்கும் தங்களின் கடமையும், உரிமையும் என நாம் நினைக்கிறோம்.

இவ்வாறு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மக்கள் வங்கிக் கிளைகள் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மக்கள் வங்கி பிரதேச காரியாலயம், யாழ் நவீனசந்தை, பிரதான வீதிக் கிளைக்கட்டிடங்கள் சேதமுற்றதால் அவையாவும் தற்காலிகமாக ஸ்ரான்லி வீதிக் கிளையில் இயங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக மக்கள் வங்கி பிரதேச முகாமையாளர் வெளியிட்டுள்ள செய்தியறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். வங்கி வேலைகள் தொடர்பான அறிவித்தல்கள் வாடிக்கையாளர்களுக்கு விரைவில் அறிவிக்கப்படுமாம்.

மேற்படி பிரதேச காரியாலயத்திலும் கிளைகளிலும் கடமையாற்றும் அனைத்து ஊழியர்களும் இன்று வியாழனன்று ஸ்ரான்லி வீதிக் கிளையில் சமுகமளிக்கும்படி பணிக்கப்பட்டுள்ளார்கள். இதே வேளை கன்னாதிட்டிக் கிளையில் கடமையாற்றும் ஊழியர்கள் வியாழனன்று அதே கிளையில் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

மக்கள் வங்கி பிராந்திய தலைமைக் காரியாலயம் உட்பட வெளிமாவட்டங்களில் கடமையாற்றும் மக்கள் வங்கி ஊழியர்கள் வேலைக்குத் திரும்ப முடியாதகட்டத்தில் யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் பிரதேச முகாமையாளரைச் சந்திக்கும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்.

## பயிர்ச்செய்கை கூட்டத் தொடர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தற்போதுள்ள சூழ்நிலையில் மேற்கொள்ளப்படும் உணவு உற்பத்தி பயிர்ச் செய்கை சம்பந்தமான கூட்டத்தொடர் ஒன்று இன்று வியாழன் காலை 10·00 மணிக்கு திருநெல்வேலி விவசாய திணைக்களத்தின் மாவட்ட விவசாய பயிற்சி நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் விவசாய கமநலசேவைகள் திணைக்கழங்களைச் சார்ந்த உத்தியோகஸ்தர்கள் அனைவரும் கலந்து கொள்வார்களெனத் தெரிகின்றது.

## குடிநீருக்கும் அதிகவிலை

(கொழும்புத்துறை)

சில தனிப்பட்ட நபர்கள் வேலணையில் இருந்து குடிநீரை பவுசர்களில் ஏற்றிக் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

# நாட்டுக்காகப் போராடியவர்களின் உயிருக்கு இரத்தத்தால் மரியாதை செலுத்திவிட முடியாது

--பிடல் காஸ்ட்ரோ



துணிவோடு போரிட்டு இறந்த வீரர்களைப் பாராட்டுவதுபோலவே பெருந்தன்மையுடன் நடந்துகொண்டு, இந்த இரத்தச்சேற்றில் தங்களதுகரங்களை நனைத்துக் கொள்ளாத அதிகாரிகளையும் நான் பெரிதும் மதிக்கிறேன்.

உயிரிழந்த எனது தோழர்களுக்காகநான் பழிவாங்கச் சபதம் ஏற்கப் போவதில்லை. அவர்களது உயிர்கள் விலைமதிப்பற்றவை; இந்தக் கொலைகாரர்கள் தங்களது உயிரைக் கொடுத்தால் கூட அதற்கு ஈடாகாது. தங்களது நாட்டுக்காகப் போராடியவர்களின் உயிருக்கு இரத்தத்தால் மரியாதை செலுத்திவிட முடியாது. அவர்கள் நேசித்த மக்களின் மகிழ்ச்சியே அவர்களுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாக இருக்க முடியும்.

மேலும் எனது தோழர்கள் மறைந்தவர்களல்ல. மறக்கப்பட்டவர்களுமல்ல. அவர்கள்

ஓர் எல்லைஉண்டு.தாய்நாட்டின் மீதும் அதன் புகழின்மீதும்எல்லையற்ற அன்பு செலுத்துவது தான் அந்த எல்லை; இந்த அன்பு என்றும் தோல்வி அடைவதில்லை; நம்பிக்கைஇழப்பதில்லை:சுருங்கி விடுவதில்லை; தியாகிகளின் சமாதிகளே நமது ஆராதனைக்குரிய தேவாலயங்கள்''

தாய் நாட்டின் மடியில்
ஒருவன் உயிர் விடும் போது
துன்பம் முடிகிறது:
சிறைச் சங்கிலிகள் தெறிக்கின்றன.
இறுதியில்,
அந்த மரணத்தில்
வாழ்வு துவங்குகிறது!

## தம்பிமாலை

—யாழ்நாஜ்—

## ஆயுதங்களைக் கீழே வைத்தால் மீண்டும் பேச்சு

-- பிரேமதாசா

(கண்டி)

"தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சு வார்த்தைகளை அரசு இன்னும் கைவிட்டுவிடவில்லை'' என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற வைபவமொன்றில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் பொழுதே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அங்கு பேசிய ஜனாதிபதி தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மிடமுள்ள ஆயுதங்களை கீழே போடும் பட்சத்திலேயே அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான பேச்சு வார்த்தைகள் சாத்தியப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

## மட்டுவில் ப. நோ. கூ. சங்கத்தில் பால்மா வகைகள் திருட்டு

(சாவகச்சேரி)

மட்டுவில் சோமாஸ்கந்தா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இரவோடு இரவாகப் புகுந்த திருட்டுக் கோஷ்டி ஒன்று அங்கிருந்த லக்ஸ்பிறே நெக்ஸ்பிறே மா பெட்டிகளையும்டோச்பற்றறிகளையும் மட்டுமே திருடிச் சென்றுள்ளது. சீனி, மா, மற்றும் பல்வேறு பொருட்கள் இருந்தும்கூட அவற்றைத் திருடர்கள் தொடவே இல்லையென இருப்பெடுப்பில் தெரிய வந்துள்ளது.

மட்டுவில் தெற்கு சோமாஸ்கந்தா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் 2 ஆம் திகதி திங்கள் இரவு இடம்பெற்ற இச்சம்ப... திருடப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

பண்டகசாலையின் பின்பக்க ஜன்னல் கம்பியை வாள்பிளேட்டால் வெட்டியே திருடர் உள்ளே சென்றுள்ளதாகத் தெரிய வருகிறது. தொடர்ந்து இப்பகுதி கிராம சேவகர் திரு. பொ. திருநாவுக்கரசு இது தொடர்பான விசாரணையை நடாத்தி வருகிறார். (35)

## மார்க்கோஸ் மீதான வழக்கு தள்ளுபடி

(நியூயோர்க்)

பிலிப்பைன்ஸ் முன்னாள் ஜனாதிபதிபேர்டினன்ட்மார்க்

## தொழில் பாதிப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு குறிகாட்டுவான் கண்ணகை அம்மன் கோவிலடி, இறுப்பிட்டி, வீரம்புளியடி போன்ற கரையோரப் பிரதேசங்களில் மீன்பிடித்தொழில் வெகுவாகக் குறைந்துள்ளது.

இப் பிரதேசங்களிலிருந்து ஆழ்கடலுக்குச் சென்று மீன்

இரத்தச்சேற்றில் தங்களதுகரங்களை நனைத்துக் கொள்ளாத அதிகாரிகளையும் நான் பெரிதும் மதிக்கிறேன்.



உயிரிழந்த எனது தோழர்களுக்காகநான் பழிவாங்கச் சபதம் ஏற்கப் போவதில்லை. அவர்களது உயிர்கள் விலைமதிப்பற்றவை; இந்தக் கொலைகாரர்கள் தங்களது உயிரைக் கொடுத்தால் கூட அதற்கு ஈடாகாது. தங்களது நாட்டுக்காகப் போராடியவர்களின் உயிருக்கு இரத்தத்தால் மரியாதை செலுத்திவிட முடியாது. அவர்கள் நேசித்த மக்களின் மகிழ்ச்சியே அவர்களுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாக இருக்க முடியும்.

மேலும் எனது தோழர்கள் மறைந்தவர்களல்ல. மறக்கப்பட்டவர்களுமல்ல. அவர்கள் முன்னெப்போதையும் விட இப்போதுதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தச் சடலங்களிலிருந்து அவர்களின் கருத்துக்கள் வெற்றிப் பெருக்குடன் வெளிப்படுவதைக் கண்டு இந்தக் கொலைகாரர்கள் ஆயாசப்படுவார்கள். தீர்க்கதரிசியின்வார்த்தைகளில் கூறுவதானால் ''இறந்தவர்களின்சமாதியருகே கண்ணீர் சிந்துவதற்கும் அடைவதில்லை; நம்பிக்கைஇழப்பதில்லை; சுருங்கி விடுவதில்லை; தியாகிகளின் சமாதிகளே நமது ஆராதனைக்குரிய தேவாலயங்கள்''

தாய் நாட்டின் மடியில்
ஒருவன் உயிர் விடும் போது
துன்பம் முடிகிறது;
சிறைச் சங்கிலிகள் தெறிக்கின்றன.
இறுதியில்,
அந்த மரணத்தில்
வாழ்வு துவங்குகிறது!

## உலகில் பெரியவை

1) உலகில் பரப்பளவில் பெரிய நாடு:- — சோவியத் ரஷ்யா
2) உலகில் மக்கள் தொகையில் பெரியநாடு:- — சீனா
3) உலகில் பெரிய ஏரி — கஸ்பியன்கடல்
4) உலகில் பெரிய செயற்கை ஏரி:- — உகண்டாவின் ஓவன் ஏரி
5) உலகின் பெரிய மலை:- — இமயமலை
6) உலகின் பெரிய மலைத்தொடர்:- — அந்தீஸ் மலைத்தொடர்
7) உலகில் பெரிய நதி:- அமேசன் நதி (6296 கி. மீ. நீர் பாயும்)
8) உலகில் நீளமான நதி:- நைல்நதி (6690 மீற்றர் நீளம்)
9) உலகில் பெரிய நன்னீர் ஏரி-; சுப்பீரியர் ஏரி (82350 ச. கி. மீ. பரப்பு)
10) உலகின் பெரிய விமான நிலையம்:- — ஜித்தாவில் உள்ள அப்துல் அசிஸ் சர்வதேச விமானநிலையம்
11) உலகில் பெரிய நீர்மின் உற்பத்தி நிலையம்:- — கிராண்கூலி (அமெரிக்க நாடு)
12) உலகில் பரப்பளவில் பெரிய நகரம்:- — ஆஸ்திரேலியாவிலுள்ள மவுண்ட் ஈசா (40978 ச. கி. மீற்)
13) உலகில் பெரிய நிலக்கரிச்சுரங்கம்:- — ஜிம்பாப்வேயில் உள்ள வாங்கி சுரங்கம்
14) உலகில் பெரிய எரிமலை;- — சிலி நாட்டிலுள்ள குவாலாத்ரி (6060 மீற்)
15) உலகின் பெரிய தீபகற்பம்:- — அராபிய தீபகற்பம் (32. 5 லட்சம் ச. கி. மீ)
16) உலகில் பெரிய பாலைவனம்:- — சகாரா
17) உலகில் பெரிய குடா:- — ஹட்சன்வளைகுடா
18) உலகின் பெரிய தீவு;- — கிறின்லாந்து
19) உலகின் பெரிய தேவாலயம்:- — சென்பீட்டர்
20) உலகில் பெரிய சமுத்திரம்:- — பசுபிக் (16. 5 கோடி ச. கி. மீற்)
21) உலகில் பெரிய கண்டம்:- — ஆசியா (4. 45 கோடி ச. கி.மீற்)

## செய்திமாலை

—யாழ்நாஜ்—

## போதைவஸ்துக்களைக் கடத்தும் புறாக்கள்!

ஹெரொயின் எனப்படும் போதைப்பொருளை மலேஷியா, தாய்லாந்து எல்லைகளுக்கிடையே கடத்துவதற்கு புறாக்களையும் பயன்படுத்துகிறார்களாம்.

புறாக்கள் வேகமாகவும், உயரமாகவும் பறப்பதனால் சுங்க அதிகாரிகள் இக் கடத்தலைத் தடுப்பதில் தடுமாறுகின்றனராம்.

போதைப்பொருள் கடத்தும் பெரும் புள்ளிகள் தங்க மூளை படைத்தவர்களாக உள்ளார்கள். இவர்கள் தங்கப் புறாக்களே!

''பச்சை முக்கோணம்'' என்று அழைக்கப்படும் ஈரான் ஆப்கானிஸ்தான் சோவியத் 'யூனியன் எல்லைகளை உள்ளடக்கிய பிரதேசத்தினூடாக போதைப்பொருள் வியாபாரம் சர்வதேச ரீதியில் நடைபெறுகின்றதாம்.

தங்கப்பிறை (Golden Crescent) எனப்படும் பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான், ஈரான் எல்லைப் பிரதேசங்கள் ஹெரோயின் தயாரிப்புக்கும் கடத்தலுக்கும் பெயர் பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

Golden Triangle தங்க முக்கோணம் என வழங்கப்படும் தாய்லாந்து, பர்மா, (மியான்மா) லாவோஸ் எனப்படும் பிரதேசங்களில் சட்டவிரோத ஹெரோயின் உற்பத்தி நடைபெறுகின்றது.

இலங்கையிலும் பெரும் போதைப்பொருள் கடத்தல் மனிதர்கள் தப்பிவிட இவர்களுக்காக கூலிக்கு கடத்திச் செல்லும் பேர்வழிகள் சிறையில் வாடுகின்றார்களாம்.

## தியாகம் வேண்டும்

ஒரு நாட்டின் சுதந்திரம் என்பது இலேசில் கிடைத்து விடக்கூடிய பொருள் அல்ல. சுதந்திரப் பயிரைக் கண்ணீர் விட்டு வளர்க்க வேண்டும். சில சமயம் உதிரத்தை விட்டும் வளர்க்க வேண்டும்.

சுதந்திரத்திற்காக வீடு வாசல்களையும் உடைமைகளையும் தத்தம் செய்யத் தயாராயிருக்க வேண்டும். உயிரைக் கொடுக்கவும் சித்தமாயிருக்க வேண்டும்.

இத்தகைய வீரத் தியாகிகளை எந்தத் தேசம் பெற்றிருக்கிறதோ அந்தத்தேசம்பாக்கியம்பெற்றதேசம்.

அப்படிப்பட்ட நாடு வெகு காலம் அடிமை நாடாக இருக்க முடியாது.

தேசத்துக்காக உயிரை விடக் கூடிய தியாகிகள் நிறைந்த நாட்டில் அறிவாளர்களும் தீர்க்க திருஷ்டி உள்ளவர்களுமான தலைவர்களும் ஏற்படும் போது அந்நாடு கட்டாயம் சுதந்திரம் பெறும். உலகத்தின் முன்னிலையில் மேன்மையுற்று விளங்கும்.

ஆனால் இதற்கெல்லாம் அடிப்படை தியாகந்தான். மக்களின் தியாக உணர்ச்சியின் பேரிலும் தியாகச் செயல்களின் பேரிலுமே ஒரு நாட்டின் சுதந்திரமாளிகை கட்டப்படவேண்டும்.

-பேராசிரியர் 'கல்கி'
ரா. கிருஷ்ணமூர்த்தி

## பால்மா வகைகள் திருட்டு

(சாவகச்சேரி)

மட்டுவில் சோமாஸ்கந்தா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இரவோடு இரவாகப் புகுந்த திருட்டுக் கோஷ்டி ஒன்று அங்கிருந்த லக்ஸ்பிறே நெக்ஸ்பிறே மா பெட்டிகளையும்டோச்பற்றறிகளையும் மட்டுமே திருடிச் சென்றுள்ளது. சீனி, மா, மற்றும் பல்வேறு பொருட்கள் இருந்தும்கூட அவற்றைத் திருடர்கள் தொடவே இல்லையென இருப்பெடுப்பில் தெரிய வந்துள்ளது.

மட்டுவில் தெற்கு சோமாஸ்கந்தா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் 2 ஆம் திகதி திங்கள் இரவு இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் உடனடியாக ஸ்தலத்திற்குச் சென்று பொருட்களை இருப்பு எடுத்தது. இதைத் தொடர்ந்து சுமார் 5,000 ரூபா பெறுமதியான பால்மா வகைகளும் டோச் பற்றறிகளும் மட்டுமே திருடப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

பண்டகசாலையின் பின்பக்க ஜன்னல் கம்பியை வாள்பிளேட்டால் வெட்டியே திருடர் உள்ளே சென்றுள்ளதாகத் தெரிய வருகிறது. தொடர்ந்து இப்பகுதி கிராம சேவகர் திரு. பொ. திருநாவுக்கரசு இது தொடர்பான விசாரணையை நடாத்தி வருகிறார். (35)

## மார்க்கோஸ் மீதான வழக்கு தள்ளுபடி

(நியூயோர்க்)

பிலிப்பைன்ஸ் முன்னாள் ஜனாதிபதிபேர்டினன்ட்மார்க்கோஸ், அவரதுமனைவி இமல்டா மார்க்கோஸ் ஆகியோர் மீதான மோசடி தொடர்பான வழக்கு விசாரணை தள்ளுபடி செய்யப்பட்டது.

பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து 200 மில்லியன் டாலருக்கு அதிகமான பணத்தை இவர்கள் மோசடி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது.

ஆயுதங்களை கீழே போடும் பட்சத்திலேயே அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான பேச்சு வார்த்தைகள் சாத்தியப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

## தொழில் பாதிப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு குறிகாட்டுவான் கண்ணகை அம்மன் கோவிலடி, இறுப்பிட்டி, வீரம்புளியடி போன்ற கரையோரப் பிரதேசங்களில் மீன்பிடித்தொழில் வெகுவாகக் குறைந்துள்ளது.

இப் பிரதேசங்களிலிருந்து ஆழ்கடலுக்குச் சென்று மீன் பிடிப்பதற்குமீனவர்கள் அஞ்சுவதே இதற்குக் காரணம் எனத் தெரிகிறது. ஒரு சில மீனவர்கள் கடலின் குறிப்பிட்ட தூரத்தில் நின்று மீன்பிடித்து விட்டுகரையேறி விடுகின்றனர். இதனால் இப்பகுதியில் மீனுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் மீனின் விலையும் அதிகரித்துள்ளது. (22)

## தட்டுப்பாட்டின் எதிரொலி

(யாழ்ப்பாணம்)

சீனி, மா பற்றாக்குறை சிற்றுண்டிச்சாலைகளில் பிரதிபலிக்கத் தொடங்கியுள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. அனேகமான சிற்றுண்டிச்சாலைகளில் உணவுப் பொருள்களின் விலைகள், தேநீரின் விலை ஆகியன அதிகரிக்கப்பட்டுள்ளன. சிலகடைகள் இப்பொருட்களின் பற்றாக்குறையால் மூடப்பட்டுக் கிடப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது. (75)

## ஜெயந்திநகர் அகதிகளுக்கு நிவாரண உதவிகள் இல்லை

(கிளிநொச்சி)

ஜெயந்திநகர் அரசாங்க நெசவுசாலைக் கட்டிடத்தில் திருநகரைச் சேர்ந்த பல குடும்பங்கள் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களுக்கு உதவ எந்தவொரு ஸ்தாபனமும் முன்வராததால் இவர்கள் கடந்த 20 நாட்களாக உண்ண உணவின்றி, வைத்திய வசதியின்றி, சுகாதார வசதியின்றி வாழ்ந்து வருகின்றனர்.

கிளிநொச்சியிலுள்ள உதவி வழங்கும் ஸ்தாபனங்களோடு தொடர்பு கொண்டபோது தங்களிடம் பணம் இல்லை என்று அந்த ஸ்தாபனங்கள் கைவிரித்து விட்டதால் இவர்கள் குழந்தை குட்டிகளுடன் கஷ்ட சீவனம் நடாத்தி வருகிறார்கள். (44)


தரமான - நாகரிகமான
'சேட்டிங் துணி வகைகள்
வேட்டிகள் மற்றும்
புடைவை வகைகளின்
உற்பத்தியாளர்களுள் தனித்துவம்
மிக்கவர்கள்

கணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

தாவடி வடக்கு,
கோக்குவில்.

உங்கள் திருப்தியே எங்கள் மகிழ்ச்சி!

(B.1220)

## சிந்தனைக்கு

மன நிம்மதி பெறும் பொருட்டு தனக்குத்தானே பொய் புகல்பவனே, பொய்யர்களிலும், கபட வேடதாரிகளிலும், மிக மோசமானவன்-

- ஹில்லர் பெல்லாக்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 05-07-90

தொலைபேசி

ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208

த. பெ. எண் 05

## உருட்டும் புரட்டும்.....

"உருட்டும் புரட்டும் சிரட்டையும் கையும்" என்று தமிழில் ஒரு பழமொழி இருக்கிறது. சிங்களத்திலும் இதைப் போன்று பழமொழி இருக்கக்கூடும். இந்தப் பழமொழியை ரஞ்சன் விஜேரத்தினா அறிந்திருக்கவில்லையோ! ஆட்சிபீடத்திலிருப்பவர்கள் இது பற்றித்தெரிந்திருக்கவில்லையென்றே தோன்றுகிறது.

போர்க்காலத்தில் தமது படையினர் தளர்ந்துவிடக் கூடாதென்பதற்காகப் பொய்சொல்வது வழக்கம்தான். இதற்காகப் படையினரே அதிர்ச்சி அடையக்கூடிய முறையில் புளுகலாமா?

யுத்தம் தொடங்கி ஒரு வாரத்திற்குள் மட்டக்களப்பு மாவட்டத்துக்குள் அரச படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன என்று அறிவித்த சிறிலங்காவின் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன், மட்டக்களப்பு நகருக்குள் அரசபடைகள் பிரவேசித்து அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாகத் தெரிவித்தார்.

மட்டக்களப்புநகருக்குள் அரசபடை பிரவேசிக்கவில்லை என்று பி. பி. ஸி. நிருபர் அனுப்பிய செய்தி வெளியானதும் "இன்னும் பிரவேசிக்கவில்லை. விரைவில் பிடித்துவிடுவோம்" என்று மாற்றிக்கொண்டார்.

யாழ்ப்பாணம் கோட்டையை முற்றுகையிட்டுள்ள விடுதலைப் புலிகள் தொடர்ந்து ஷெல் தாக்குதல் நடத்தி வருவதாகக் கூறினார் ரஞ்சன் விஜேரத்தினா.

குடிமக்கள் உள்ள பகுதிகள்மீது தாக்குதல் நடத்தக்கூடாதென்று படையினருக்கு உத்தரவிட்டு இருப்பதாகவும் பொதுமக்கள் வாழும் பகுதிகளில் குண்டு வீசித் தாக்கவில்லையென்றும் அமைச்சர் ரஞ்சன் கூறினார். அரசபடைகளின் தாக்குதலால் உயிரிழப்பு ஏற்படவில்லை என்றும் அவர் சொன்னார்.

யாழ். நகரில் பொதுமக்கள் வாழும் பகுதிகளில் பாரிய குண்டுகளும் எரிகுண்டுப் பீப்பாக்களும் வீசப்பட்டன. வீடுகள், வர்த்தக நிலையங்கள் பல தரைமட்டமாகின.

மக்கள் நகரைவிட்டு வெளியேறியிருந்ததாலும் முன்னெச்சரிக்கையாகப் பதுங்கு குழிகள் அமைத்து இருந்ததாலும் உயிர்ச்சேதம் பெருமளவில் ஏற்படாமல் தவிர்க்கப்பட்டது.

ஆனாலும் கோட்டைப் பகுதியில் தாக்கிய சிறிலங்கா விமானப்படை விமானங்களின் குண்டு இரண்டு மைல்களுக்கு அப்பால் ஒரு வீட்டில் விழுந்து சிறு குழந்தைகளுட்பட ஏழு பேரைப் பலிகொண்டது.

இதன்பின்னர் விமானிகள் இலக்குத் தவறிவிட்டனர் என்று ரஞ்சன் விஜேரத்தினா ஒப்புக்கொள்ள, படையினர் கண்மூடித்தனமாகக் கண்டபடி தாக்குதல்

## ஸ்ரீலங்கா அரசின்

# ராணுவ மயமாக்கப்பட்ட அரசியலும் அரசியல் மயமாக்கப்பட்ட ராணுவமும்

இன்று ஸ்ரீலங்கா அரசு இராணுவ மயமாக்கப்பட்ட அரசியலையும் அரசியல் மயமாக்கப்பட்ட இராணுவத்தினையும் கொண்டுள்ளது. அரசியலிலிருந்து இராணுவத்தையோ அன்றி இராணுவத்திலிருந்து அரசியலையோ அடிப்படையிற் பிரித்துப் பார்க்க முடியாது என்பது உண்மையே ஆயினும் அரசியலில் முன்னணிப் பாத்திரம் வகிக்கக்கூடிய ஒரு முதன்மைச் சக்தியாக ஸ்ரீலங்கா இராணுவம் மாறிவிட்டதென்பதே இங்கு கவனிக்கப்பட வேண்டிய அம்சமாகும்.

"சுதந்திரம்அடைந்தகாலத்திலிருந்து தேர்தல் மூலம் அரசியல் அதிகாரக் கைமாற்றம் நிகழ்ந்து வந்த நாடு" என்றும், "பிரித்தானிய பாராளுமன்றப் பாரம்பரியத்தையும் மேற்கத்தேசஜனநாயக பாரம்பரியத்தையும் பேணிப் பாதுகாத்துவந்த நாடு" என்றும், "காலனித்துவ ஆதிக்கத்திலிருந்து சுதந்திரம் அடைந்த நாடுகளுள் ஜனநாயக பாரம்பரியங்களைப் பேணி அவற்றுள் முன்னுதாரணமாகத் திகழும் நாடு" என்றும் ஸ்ரீலங்கா அரசு தனது தலையிற் தானே பெரும் புகழாரத்தை சூடிக்கொண்டுள்ளது.

ஆனால் உண்மையில் நிகழ்ந்துள்ளதென்ன? ஜனநாயகப் பாரம்பரியம் என்பதற்குப் பதிலாக ஓர் இராணுவப் பாரம்பரியமே ஸ்ரீலங்கா அரசில் வளர்ந்துள்ளது. பார்வைக்குத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயகரீதியான அரசு இருப்பதுபோன்ற தோற்றம் இருந்தாலும்; அடிப்படையிலும், நடைமுறையிலும் ஜனநாயகக் குணாம்சம் சிறிதுமற்ற ஓர் இராணுவ ஆட்சி நாடாகவே ஆகியுள்ளது.

இன்றைய நிலையில் பிரேமதாசா வெள்ளை உடை அணிந்துள்ள ஓர் இராணுவ ஆட்சியாளனே. இராணுவம் நீட்டும் பத்திரங்களில் கையொப்பம் இடுகின்ற ஒரு போலி வெள்ளை உடுப்புக்காரனே.

தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்கள் தமது அரசியல் அதிகாரத்தைத் தக்கவைப்பதற்காக அரசியலைப் படிப்படியாக இராணுவமயப்படுத்தினர். இதனால் இராணுவம் அரசியலில் வளரத் தொடங்கியது. இவ் வளர்ச்சியானது இராணுவத்தை அரசியல் மயப்படுத்தி அதனை அரசியலில் முன்னணிக்குக் கொண்டு வந்தது.

ஆனால் அரசியற் தீர்மானங்களை எடுக்கும் விடயத்தில் இராணுவம் மேலோங்கியது. இப்படிப்பட்ட சூழலில் வெள்ளை உடுப்பு அரசியலானது இராணுவத்துடன் சேர்ந்து கொள்ளும், அல்லது அது இராணுவத்தால் விழுங்கப்படும். இந்த நிலையில் பிரேமதாசா இராணுவத்திற்குப் பச்சைக் கொடி காட்டுபவராகவும் விளக்குப் பிடித்துவிடுபவராகவும் நிற்கின்றார்.

அரசியல் இராணுவமயமாகவும் அதன் விளைவாக இராணுவம் அரசியல் மயமாகவும் தொடங்கிய வளர்ச்சிப் போக்கை நோக்குவோம். கள்ளக்குடியேற்றத் தடுப்பு என்பதன் பெயரில் வடபகுதியில் இராணுவம் நிலைகொள்ளத் தொடங்கியது. இந்திய எதிர்ப்பு, தமிழின எதிர்ப்பு என்பன இராணுவத்தின் அடிப்படைத் தாரதம்மியங்களாகின

### சாரணன்

சுதந்திர இலங்கையில் டி. எஸ். சேனநாயக்கா, டட்லி சேனநாயக்கா, சேர் ஜோன் கொத்தலாவல என அடுத்தடுத்து மூன்று ஐ.தே.க. பிரதமர்கள் ஆட்சிக்கு வந்தனர். இதன் பின்பு சுதந்திரக் கட்சித் தலைவர் பண்டாரநாயக்கா 1956 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தார். முதல் மூன்று பிரதமர்களும் ஐ தே.கவினர் என்ற வகையில் யு.என்.பி. இராணுவமும், பொலிசும் ஐ.தே.க.விற்கு ஆதரவானதாகவே இருந்தன. இதனால் ஆயுதப் படையினர் தனக்கு ஆதரவற்றவர்கள் என்ற அச்சம் பண்டாரநாயக்காவிடம் இருந்தது.

தமிழரசுக் கட்சியின் திருமலை யாத்திரையைக் காரணம் காட்டி அதன் சவாலை எதிர் கொள்வதற்கெனக் கூறி ஒரு லட்சம் தொண்டர்களைத் திரட்டும் பணியிற் பண்டாரநாயக்கா ஈடுபட்டார். உண்மையில் இதன் உள்நோக்கம் என்னவெனில் இத்தொண்டர்களை முதலிற் தனிப்பட்ட இராணுவமாக வைத்திருந்து பின்பு படிப்படியாக இராணுவத்திற் சேர்த்துக் கொள்வதுதான். இதனால் இது ஒரு சுதந்திரக்கட்சி இராணுவத்தை அமைப்பதற்கான முயற்சிஎன விளங்கிக்கொண்ட ஜே ஆர். ஜயவர்த்தனா இத் "தொண்டர்படை" சேகரிப்புக்கு பெரும் ஆட்சேபனை தெரிவித்தார். ஐ. தே. க.யின் பலம் பொருந்திய எதிர்ப்பால் இத்திட்டம் கைவிடப்பட்டது. எனவே தென்னிலங்கையின் அரசியல் ஆதிக்கப் போட்டி இராணுவப் பரிமாணம் பெற பெரிதும் துடிதுடித்தது.

1971ஆம் ஆண்டு ஜே.வி.பி.யின் கிளர்ச்சியின் போது ஸ்ரீலங்கா அரசில் இரண்டாயிரம் வரையிலான இராணுவத்தினரே இருந்தனர். ஆனால் இன்று உத்தியோக பூர்வ அறிக்கையின்படி அறுபதினாயிரம் இராணுவத்தினர் உள்ளனர். இதனைவிட ஆயுதம் தரித்த குண்டர்கள் வேறு உண்மையில் இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்த இராணுவத்தினரின் தொகையைவிட இன்றுள்ள இராணுவத்தின் தொகை ஏறக்குறைய 50 மடங்கு பெரிதாகும்.

தென்னிலங்கையில் வெடித்த ஜே.வி.பி. கிளர்ச்சியை ஒடுக்குவதற்கு இலங்கை இராணுவத்தின்பலம் போதாமையால் 1971ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தின்உதவி பெறப்பட்டது. அவ்வாறே ஜே.வி.பி. கிளர்ச்சியை அடக்கியபின்பு ஸ்ரீமாவோபண்டாரநாயக்கா அரசாங்கம் இராணுவத்தைப் பலப்படுத்தத் தொடங்கியது. இக்காலத்தில் இலங்கை இராணுவம் சுதந்திரக் கட்சி இராணுவமாக பெருமளவு மாறியது.

1977ஆம் ஆண்டுத் தேர்தலில் ஸ்ரீமா தோல்வி அடைந்தாலும்ஆட்சி அதிகாரத்தை ஐ தே. க. யிடம் ஒப்படைக்க மாட்டார் என்ற அச்சம் ஓரளவு நிலவியது. 1965 ஆம் ஆண்டுபொதுத் தேர்தலில் ஸ்ரீமா தோல்வி அடைந்திருந்த போதிலும் ஐ.தே. க. விடம் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைக்கத் தயங்கினார். அவ்வேளை பிரதமர் ஸ்ரீமாவின் செயலாளராக இருந்தவரும், இன்று பிரேமதாசாவின் ஆலோசகராக இருப்பவருமான பிறட்மன் வீரக்கோனினது ஆலோசனையின் பெயரிலும் அன்று மகாதேசாதிபதியாய் இருந்த வில்லியம் கோபல்லவாவின் வேண்டுகோளின் பேரிலுமே ஸ்ரீமா தனது பதவியை இராஜினாமாச் செய்து ஐ.தே க. அரசாங்கம் அமைக்க இடம் கொடுத்தார்.

இவ்வாறாக ஸ்ரீமா 1977 ஆம் ஆண்டுத் தேர்தலிற் தோல்வி அடைந்தால் இராஜினாமா செய்யாதிருப்பதற்குரிய இராணுவ பலம் அவரிடம் உண்டு என்ற அச்சம் நிலவியது. ஆயினும் 3/4 பங்கு பெரும்பான்மைப் பலத்துடன் ஐ.தே.க. வெற்றி பெற்ற சூழலில் ஸ்ரீமா பதவி துறந்தார்.

(தொடரும்

# கொர்பசேவின் திட்டங்களுக்கு எதிர்ப்பும் ஆதரவும்

(மாஸ்கோ)

சோவியத் கம்யூனிஸ்ட்கட்சி மாநாட்டில் ஜனாதிபதி கொர்பசேவ் தெரிவித்துள்ள பொருளாதாரமறுசீரமைப்புக் கொள்கைகளை சில கம்யூனிஸ்ட் தலைவர்கள் எதிர்த்துள்ளனர்.

உலகில் புதிய புதிய முறைகளும், கண்டுபிடிப்புக்களும் இடம்பெற்று ஏனைய நாடுகள் முன்னேறும் போது சோவியத்யூனியனில் 1930இல் ஏற்படுத்திய பொருளாதார முறையை பின்பற்றியே வருகிறோம் என்றும் இதனை மறுசீரமைக்க வேண்டும் என்றும் அவர் இம் மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

## அணுவாயுத அமைப்புகளை அகற்ற வேண்டுகோள்

...வின் நவீன மாற்றங்களில் இருந்து விடுபட்டு பின் தங்கிய நிலைக்கு தள்ளப்படுவோம் என்றும் கொர்பசேவ் எச்சரித்திருந்தார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற மாநாட்டில்உரையாற்றிய அரசியல் குழு உறுப்பினர்கள் கொர்பசேவின் புதிய திட்டங்களை வரவேற்றுள்ளனர்.

சோவியத்தின் கே. ஜி பி.

## மாதாந்த நிவாரண பணம் வழங்கவில்லை

(கொழும்புத்துறை)

ஏழை மககளுக்கு அரசினால் வழங்கப்படும் பொதுசன உதவி மாதாந்த சகாய கொடுப்பனவுகள் தற்போதுள்ள நிலைமைகளால் சில தபால் அலுவலகங்களில் வழங்கப்படவில்லை.

இதேபோல கசரோக நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிப்பணமும் வழங்கப்படவில்லை.

இதனால் இவற்றைப் பெற

இருப்பதாகவும் பொதுமக்கள் வாழும் பகுதிகளில் குண்டு வீசித் தாக்கவில்லையென்றும் அமைச்சர் ரஞ்சன் கூறினார். அரசபடைகளின் தாக்குதலால் உயிரிழப்பு ஏற்படவில்லை என்றும் அவர் சொன்னார்.

யாழ். நகரில் பொதுமக்கள் வாழும் பகுதிகளில் பாரிய குண்டுகளும் எரிகுண்டுப் பீப்பாக்களும் வீசப்பட்டன. வீடுகள், வர்த்தக நிலையங்கள் பல தரைமட்டமாகின.

மக்கள் நகரைவிட்டு வெளியேறியிருந்ததாலும் முன்னெச்சரிக்கையாகப் பதுங்கு குழிகள் அமைத்து இருந்ததாலும் உயிர்ச்சேதம் பெருமளவில் ஏற்படாமல் தவிர்க்கப்பட்டது.

ஆனாலும் கோட்டைப் பகுதியில் தாக்கிய சிறிலங்கா விமானப்படை விமானங்களின் குண்டு இரண்டு மைல்களுக்கு அப்பால் ஒரு வீட்டில் விழுந்து சிறு குழந்தைகளுட்பட ஏழு பேரைப் பலிகொண்டது.

இதன்பின்னர் விமானிகள் இலக்குத் தவறிவிட்டனர் என்று ரஞ்சன் விஜேரத்தினா ஒப்புக்கொள்ள, படையினர் கண்மூடித்தனமாகக் கண்டபடி தாக்குதல் நடத்தவில்லையென்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க கூறியிருக்கிறார்.

யாழ்ப்பாணம் கோட்டைக்குள் படுகாயமுற்றிருக்கும் சிப்பாய்கள் பதினேழு பேரையும் விமானப்படை ஹெலிக்கொப்டர் வெற்றிகரமாக இறங்கி மீட்டெடுத்து விட்டதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அறிவித்தது.

இந்திய வானொலியும் இதே செய்தியை முதலில் அறிவித்தது. பின்னர் பதினேழு பேரில் சிலரை வெற்றிகரமாகமீட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

தொடர்ந்து எட்டுப்பேர் மட்டுமே மீட்கப்பட்டதாகவும் மற்றவர்களை மீட்பதற்கு இரண்டாவது ஹெலி முயற்சித்தபோது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தித் தடுத்துவிட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு உணவுப் பொருள்களும் மருந்து மற்றும் எரிபொருளும் அனுப்பப்பட்டுள்ளதாக அரசு அறிவித்து பல நாட்களாகிவிட்டன.

முதலில் உணவு, எரிபொருள், மருந்து ஆகியவை வடக்குக் கிழக்குக்கு அனுப்பப்பட்டுவிட்டதாக அரசு அறிவித்தது. பின்னர் சில தினங்கள் கழித்து லொறிகளில் ஏற்றப்படுவதாக அறிவித்தது.

இந்த லொறிகளில் ஒன்றாவது இன்னமும் வடக்கே வந்து சேரவில்லை.

இதை அடுத்து வடக்குக் கிழக்குப் பகுதிகளிலுள்ள அகதிகளுக்கு விமான மூலம் உணவுப் பொட்டலங்கள் போடுவதாக சிறி லங்கா ஜனாதிபதி பிரேமதாஸா அறிவித்தார். ஆனால் ஒரு பொட்டலம்கூட அகதிகளுக்குக் கிடைக்கவில்லை!

யாழ். கோட்டைக்குள்ளிருக்கும் சிப்பாய்களுக்கு விமானத்திலிருந்து போடப்படும் பொதிகள் பலவும் கோட்டைக்கு வெளியே வீழ்வதால் அவை அகதிகளுக்குக் கிடைப்பதாக பிரேமதாசா நினைக்கிறாரோ!

கோட்டைக்குள் இப்பொழுது தமிழ்ப் பொலிசார்தான் அதிகம் இருக்கிறார்கள். சிங்கள இராணுவத்தினர் சிலரே உள்ளனர் என்று அமைச்சர் ரஞ்சன் இப்போது கூறுகிறார்.

கோயில்களிலும் தேவாலயங்களிலும் விடுதலைப் புலிகள் ஒளிந்திருக்கிறார்கள் என்று பிரேமதாசா கூறுகிறார்.

இவை தர்மிஷ்டரும் பின்னர் ராஜீவும் கூறிய பழைய பல்லவிகள்:

பொய்யும் புரட்டும் இப்பொழுதே சிறிலங்காவை வெளி நாடுகளிடம் ''அம்மா, தாயே'' என்ற நிலைக்குக் கொண்டுவந்திருக்கிறது. இதே நிலை இனியும் நீடித்தால் வீதியில் துண்டு விரித்து ''கருணை காட்டுங்கள் கனவான்களே'' என்று கதறும்நிலையில்தான் கொண்டுபோய்விடும்.

# கொர்பசேவின் திட்டங்களுக்கு எதிர்ப்பும் ஆதரவும்

(மாஸ்கோ)

சோவியத் கம்யூனிஸ்ட்கட்சி மாநாட்டில் ஜனாதிபதி கொர்பசேவ் தெரிவித்துள்ள பொருளாதாரமறுசீரமைப்புக் கொள்கைகளை சில கம்யூனிஸ்ட் தலைவர்கள் எதிர்த்துள்ளனர்.

உலகில் புதிய புதிய முறைகளும், கண்டுபிடிப்புக்களும் இடம்பெற்று ஏனைய நாடுகள் முன்னேறும் போது சோவியசயூனியனில் 1930இல் ஏற்படுத்திய பொருளாதார முறையை பின்பற்றியே வருகிறோம் என்றும் இதனை மறுசீரமைக்க வேண்டும் என்றும் அவர் இம் மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

பழைய முறைகளை பின்பற்றினால் ஐரோப்பாவின் நவீன மாற்றங்களில் இருந்து விடுபட்டு பின தங்கிய நிலைக்கு தள்ளப்படுவோம் என்றும் கொர்பசேவ் எச்சரித்திருந்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற மாநாட்டில்உரையாற்றிய அரசியல் குழு உறுப்பினர்கள் கொர்பசேவின் புதிய திட்டங்களை வரவேற்றுள்ளனர்.

சோவியத்தின் கே. ஜி பி. உளவு ஸ்தாபன தலைவரும் இதனை எதிர்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## அணுவாயுத அமைப்புகளை அகற்ற வேண்டுகோள்

(வாஷிங்டன்)

ஐரோப்பாவில் உள்ள அணுவாயுத அமைப்புக்களை அகற்ற வேண்டும் என்று நேட்டோ உறுப்பு நாடுகளை அமெரிக்கா கேட்டுள்ளது.

இவ்வார இறுதியில் நடைபெறவுள்ள நேட்டோ அமைப்புக்களின் தலைவர்கள் மாநாட்டில் இது குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

நெடுந்தூரம், குறுகியதூரம் பாயும் ஏவுகணைகளையும் நவீனமயப்படுத்தப் போவதில்லை என நேட்டோ அமைப்பு அறிவித்துள்ளது.

## 1426 ஹஜ் யாத்திரிகர்கள் சனநெரிசலில் இறந்தனர்

(றியாட்)

கடந்த திங்கட் கிழமை மெக்காவுக்கு சென்ற முஸ்லிம் ஹஜ்யாத்திரிகர்கள் நெரிசலில் மரணமானது தொடர்பாக சவூதிஅரேபிய அரசு உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் இரவு அறிவித்துள்ளது.

இந்த நெரிசலில் ஆயிரத்து நாநூற்றி இருபத்தாறுபேர் இறந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. ஆயிரக்கணக்கானோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இறந்தவர்களில் அனேகமானோர் இந்தோனேஷியா, மலேஷியா, சவூதிஅரேபியா நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. ஐந்து பேர் இந்தியர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

போக்குவரத்து விதிகளை மீறியதால் இந்த சுரங்கப் பாதையில் நெரிசல் ஏற்பட்டதாகவும் அதனாலேயே இச் சம்பவம் ஏற்பட்டதாகவும் சவூதி மன்னர் தெரிவித்தார்.

மெக்காவுக்கு அருகில் உள்ள 14ஆம் நூற்றாண்டுபழைமை வாய்ந்த அல் மீனா என்ற சிறிய சுரங்கப் பாதையில் இச் சம்பவம் நடைபெற்றது.

## இறுதி ஆட்டத்திற்கு ஆஜென்டீனா தெரிவு

### - இத்தாலி ஆஜென்டீனாவிடம தோல்வி

(ரோம்)

நான்காவது உலகக்கிண்ணத்திற்கான போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் ஆஜென்டீனா வெற்றி பெற்றது. இறுதி ஆட்டத்தில் விளையாடும் தகுதி பெற்றது.

இத்தாலியுடன் நடைபெற்ற இப் போட்டியில் முதல் பகுதி நேரத்தில் இத்தாலி ஒரு கோல் போட்டு முன்னணியில் இருந்தது. ஆனால் பிற்பகுதியில் ஆஜென்டீனா ஒரு கோல் போட்டு சமன் செய்தது.

முடிவிற்காக மீண்டும் வழங்கப்பட்ட அரை மணி நேரத்தில் இரு நாடுகளும் கோல் போடாமையினால்பனால்ட்டி மூலம் முடிவு எடுக்கும் நிலை ஏற்பட்டது.

வழங்கப்பட்ட தலா ஐந்து பனால்டியினை முதலில் இத்தாலி ஆரம்பித்து வைத்தது. மாறி மாறி முதல் மூன்று பனால்டிகளும் கோல்களாக இரு நாடுகளாலும் போடப்பட்டது. நான்காவது பனால்டியை இத்தாலி கோட்டைவிட்டது. ஆஜென்டீனா கோல் காப்பாளர் மிகச் சாதுரியமாக அதைத் தடுத்தார். ஆனால் ஆஜென்டீனாவின் நான்காவது பனால்டியை அணித் தலைவர் மரடோனா கோலாக மாற்றினார். இத்தாலியின் ஐந்தாவது பனால்டியையும் ஆஜென்டீனா கோல் காப்பாளர் வெற்றிகரமாகத் தடுத்ததினால் ஆஜென்டீனா வெற்றிக்கு ஐந்தாவது பனால்டியைப் பாவிக்காமலே 3 - 4 என்ற நிலையில் வெற்றி பெற்றது.

## வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பு

(ஜெனிவா)

ஈரானிய வெளிநாட்டு அமைச்சரும், ஈராக் வெளிநாட்டு அமைச்சரும் நேற்று முன்தினம் இங்கு சந்தித்துப் பேசினார்கள்.

இரு நாடுகளின் யுத்தத்தின் பின்னர் இவர்கள் இங்கு சந்தித்தனர். ஐ. நா. பொதுச் செயலாளர் பெரஸ்டிக் கெயார் இதற்கு ஏற்பாடு செய்தார்.

## இடம்பெயர்ந்தோர்வீடுகளில் திருடர்கள் கைவரிசை

கடந்த 20 நாட்களுக்கும் மேலாக யாழ்நகரில் நடைபெற்றுவரும் ஹெலி, பொம்மர், ஷெல் தாக்குதல்களை தாக்குப் பிடிக்காமல் இடம் பெயர்ந்து பொதுமக்கள் சென்றுள்ள பகுதிகளில் திருட்டுக்கள் அதிகரித்து உள்ளதாகத் தகவல்கள் பரவலாகத் தெரியவருகின்றன.

குருநகர், இரண்டாம் குறுக்கு வீதியில் மரியாம் பிள்ளை என்பவரது வீட்டில் ரேடியோ, றெக்கோடர், எவர்சில்வர் பாத்திரங்கள். உடுபுடைவைகள் முற்றாகத் திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அடப்பன் வீதியில் அவுறான் கஸ்பார் வீட்டில் கோழிகள் திருடப்பட்டுள்ளன மவுண் கார்மல் வீதியில் தியோடர் கோமஸ் என்பவரது வீட்டில் ஆட்டுக்குக் கஞ்சி வைத்த எவர் சில்வர் பாத்திரத்தையும் ஆட்கள் வீட்டில் இருக்கையிலேயே திருடர்கள் கையாடி இருப்பதாகத் தெரிவிக்கப் பட்டது.

பொதுமக்கள் பயப்பீதியில் திறந்த கதவு மூடாமல் பாதுகாப்புத் தேடி ஓடுவதைப் பயன்படுத்தி திருடர்கள் கைவரிசை காட்டி வருவதாகப் புகார்கள் கூறப்படுகின்றன. (21)

போலி அகதிகள்

## நிவாரணம் பெற இடமாற்றம்

(வல்வெட்டித்துறை)

பாதிப்புக்குள்ளான மக்கள் பலர் வதிவிடங்களை மாறிப் பாதிப்புற்றவர்களுக்கான நிவாரணங்களான உலர் உணவுப் பொருட்களைப் பெறுகிறார்களாம்.

தற்போது ஏற்பட்டிருக்கும் ஸ்ரீ லங்கா இராணுவததின் ஷெல், விமானத்தாக்குதல்களைக் காரணமாக வைத்து வடமராட்சியில் சிலர் தென்மராட்சி வடமராட்சி கிழக்கு போன்ற இடங்களுக்குப் புலம் பெயர்ந்து அகதிகளுக்கான நிவாரணம் பெற்று வருகிறார்கள். இதனால் திருமலை, மட்டக்களப்பு, காங்கேசன்துறை ஆகிய இடங்களிலிருந்து புலம் பெயர்ந்தோர் பெருமளவில் பாதிப்புள்ளாகியிருக்கிறார்கள். (68)

## மாதாந்த நிவாரண பணம் வழங்கவில்லை

(கொழும்புத்துறை)

ஏழை மககளுக்கு அரசினால் வழங்கப்படும் பொதுசன உதவி மாதாந்த சகாய கொடுப்பனவுகள் தற்போதுள்ள நிலைமைகளால் சில தபால் அலுவலகங்களில் வழங்கப்படவில்லை.

இதேபோல கசரோக நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிப்பணமும் வழங்கப்படவில்லை.

இதனால் இவற்றைப் பெற வேண்டியவர்கள் தினமும் தபால் நிலையங்களுக்கு அலைந்து திரிகின்றனர்.

## சிறுவன் அகப்பட்டான்

(கிளிநொச்சி)

கடந்த சில தினங்களுக்கு முன் தர்மபுரத்தில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலின் போது தர்மபுரம் கஸ்தூரிபாய் அனாதைப் பெண்கள் இல்லத்திலிருந்து காணாமல்போன சிறுவன் தேடுதலின் பின் கண்டுபிடிக்கப்பட்டான்.

சசிதரன் என்ற 10 வயதுச் சிறுவனே அவ் இல்ல ஆசிரியை திருமதி க. புவனசுந்தரியினால் தேடிக் கண்டு பிடிக்கப்பட்டவராவார். அச் சிறுவன் குண்டு வீச்சுக்குப் பயந்து காட்டுப் பக்கமாக ஓடிமறைந்திருந்தானாம். (49)

## மூடப்பட்ட கடைகள் வீடுகளில் வியாபாரம்

(யாழ்ப்பாணம்)


ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதல், விமானக் குண்டு வீச்சுகளுக்கு அஞ்சி தமது கடைகளில் உள்ள பண்டங்களை எடுத்துச் சென்ற பெரியகடை வியாபாரிகள் தற்சமயம் தமது வீடுகளில் வைத்து வியாபாரம் செய்கின்றனர். புடவைக் கடைகள், பலசரக்குக் கடைகள் மருந்துக் கடைகள் ஆகியன வீடுகளில் திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெறுகிறது. மக்களும் பொருட்களைக் கொள்வனவு செய்கிறார்கள்.

Registered as a News Paper at the G. P. O.

ஈழநாதம்

## ஆபத்தான மின் கம்பங்கள்

நாயன்மார்கட்டு பாரதிவீதியில் இரு மின்சார தூண்கள் உடைந்து எந்த நேரமும் விழும் ஆபத்தான நிலையில் பல நாட்களாக காணப்படுகிறது மின்சார இணைப்பு கம்பிகள் தாங்கியபடியே இவ்விரு தூண்களும் இருக்கின்றன.




# அகதிகள் அதிகரிப்பால் யாழ் மாவட்டத்தில் உணவுத்தட்டுப்பாடு

## ஒரு வாரத்துக்கு மட்டுமே கையிருப்பு; 4-வது பங்கீட்டு முத்திரை இடைநிறுத்தம்

(வல்வெட்டித்துறை)

யாழ்.மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் உணவுப்பொருட்கள் எரிபொருள் என்பன இன்னும் ஒருவாரத்திற்கு மட்டுமே கையிருப்பில் உள்ளதாகவும் தீவுப்பகுதிகளில் அதுவும் இல்லை என யாழ். பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இருபத்தைந்து கிளைகளும் ஒருமித்த குரலில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபரிடம் முறையிட்டுள்ளன.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 10-30 மணியளவில் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைமைக் காரியாலயத்தில் யாழ்.அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிரட் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்படி தட்டுப்பாடு சம்பந்தமான விடயம் அரசாங்க அதிபரிடம் தெரிவிக்கப்பட்டது.

மேலும் காங்கேசன்துறை வந்து கொழும்பு திருப்பியுள்ள மாக் கப்பல் மீண்டும் யாழ். திரும்பாது எனவும் யாழ்.அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தற்போது வெளிமாவட்ட அகதிகள் தொகை அதிகரித்து வருவதால் தற்போது யாழ். மாவட்டத்தில் இருக்கும் மக்களே பெரும் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. காரணம் வெளிமாவட்ட அகதிகளுக்கு உதவும் முகமாக நான்காம் வாரத்திற்கான உணவுப் பங்கீட்டு முத்திரைகள் இடைநிறுத்தப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர்களின் உணவு பற்றாக்குறை பற்றிய கேள்வி ஒன்றிற்குப் பதில் அளிக்கையில் வவுனியா வரை உணவுப் பொருட்கள் ரெயில் மூலம் கொண்டு வருவதற்கு தன்னாலான சகல உதவிகளையும் செய்முடியும்என்றும்வவுனியாவில் இருந்து யாழ். கொண்டு வரும் பொருட்களுக்கு யார் பாதுகாப்பு அளிப்பது என்பதே பெரும் கேள்வியாக உள்ளது என்றும் தெரிவித்தார். எரி பொருள் தற்போது பெரும் தட்டுப்பாடாக உள்ளதால் தனியார் யாரும் கொண்டுவந்து விநியோகம் செய்யலாம் என்றும் பொது மக்களின் நலன் கருதி வரிச் சலுகைகள் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

மாலை 3-00 மணிவரை நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் திரு. எஸ். நடேசபிள்ளை (யாழ். கூட்டுறவு உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி) திரு. எஸ். லிங்கதாசன் (கூட்டுறவு உதவி அதிகாரி) தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் டொமினிக் அருள் மாஸ்டர், மயூரன், பிராந்திய மக்கள் வங்கி முகாமையாளர், யாழ். மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர்கள் ஆகியோர் பங்குபற்றினர். (68)

## காயமடைந்த அதிகாரிகளை பிரேமதாசாபார்வையிட்டார்

(கண்டி)

வடக்கு கிழக்கு பகுதிகளில் விடுதலைப் புலிகளுடன் மோதியபோது படுகாயமுற்ற நான்கு பொலிஸ் உயர் அதிகாரிகளை நேற்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசா சென்று பார்வையிட்டார்.

இவர்களுக்கு அவசியமானால் விசேட சிகிச்சை வழங்கப்படும் எனவும் அவர் கூறினார்.

## தமிழ் நாட்டிற்கு மேலும் 788 இல. தமிழ் அகதிகள்

(சென்னை)

இலங்கையில் இருந்து நேற்று 788 தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் மண்டப முகாமில் ... மாக 4400 பேர் உள்ளடங்குவர் என அகதி முகாம்களுக்கு பொறுப்பாக இருக்கும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கடற்படை ரோந்தால் மீனவர் பெரிதும் பாதிப்பு

(வல்வெட்டித்துறை)

வடமராட்சிக் கரையோர மீனவர் குடும்பங்கள் அன்றாட மீனவத்தொழிலில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கையால் பெரும் பாதிப்படைவதால்உணவிற்கேபெரும் கஷ்டப்பட்டு வருகின்றார்கள்.

வடமராட்சியின் கரையோரங்களில் ஸ்ரீலங்கா கடற்படையினர் கரையோர மீனவர்களின் குடியிருப்புகளையும், மீன்பிடிப்படகுகளையும் அடிக்கடி சேதப்படுத்தி வருவதுடன் மீன்பிடிப்பதற்குத் தடையும் போட்டுள்ளார்கள்.

இவர்களின் இந்நிலையினை விளக்கி வடமராட்சிக் கரையோர மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டுமென பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் அவர்களிடம் வல்வை மீனவர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (68)

### கொக்காவிலில்

## தொடர்ச்சியான ஹெலிதாக்குதல் மக்கள் வெளியேற்றம்

(கிளிநொச்சி)

தினமும் கொக்காவில் பகுதியில் ஹெலிகொப்டரிலிருந்து தாக்குதல்கள் நடாத்துவதால் பொதுமக்கள் பீதியடைந்து தமது வீடுகளைவிட்டு வெளி... களை நோக்கியும் ஷெல் அடிக்கப்பட்டு வருவதால் விறகு வெட்டிச்சீவியம்நடாத்திவரும் அப்பகுதி மக்கள் விறகுவெட்டி வியாபாரம் செய்வதைக்கூடக் கைவிட்டுள்ளனர்.

### கொக்காவிலில் . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார் எனத் தெரிகிறது தொடர்ந்தாற் போல் பலியாகிய சிப்பாயைத் தூக்க வந்தவர்கள் மீது விடுதலைப் புலிகள் சுட்டதில் இருவர் காயமடைந்தார்கள் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இச்சம்பவம் நேற்றுமுன்தினம் பிப 3 மணியளவில் இடம் பெற்றது.

இதன் பின் அவ்ரோ விமானம் குண்டுகளை வீசியது.

### தமிழருக்கு . .

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

ளையும், மருத்துவ வசதிகளையும், செய்ய இந்தியா முன்வர வேண்டும்'' என்று பாரதிய ஜனதாக் கட்சியின் செயலாளர் திரு. ஜே. பி. மாத்தூன் இந்திய மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னையில் நிருபர்கள் மத்தியில் உரையாற்றிய அவர் மேற்கண்ட வேண்டுகோளை இந்திய அரசாங்கத்துக்கு விடுத்துள்ளதுடன்; உணவு, மருந்து உட்பட பல அத்தியாவசிய பொருட்கள் இன்றி இலங்கைத் தமிழ் மக்கள் அடையும் கஷ்டங்கள் குறித்து தனது ஆழ்ந்த கவலையையும் தெரிவித்துக் கொண்டார்.

இலங்கையின் இந்த இன அழிப்பு நடவடிக்கைகளை ...

### யாழ். போதனா . .

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

காரணமாக ஏராளமான அவசர சிகிச்சை பெற வேண்டிய நோயாளிகளும். வைத்தியசாலை ஊழியர்களும் அதிகாரிகளும் பெரும் சிரமத்துக்கு உள்ளாகிவந்தனர் இதனால் தற்காலிகமாக இவ் வைத்திய சாலையை மானிப்பாய் வைத்திய சாலையில் இயங்க அனுமதிக்கப் பட்டிருந்தது.

மானிப்பாய் வைத்திய சாலையில் யாழ். போதனா வைத்திய சாலை போல் சகல வசதிகளும் பெற்றுக் கொள்வது மிகவும் சிரமமாகவே இருந்து வருகின்றது. இதனால் யாழ் போதனா வைத்திய சாலையை மீண்டும் இயங்கச் செய்வதற்கான யோசனையை பல வைத்திய அதிகாரிகளும் உத்தியோகஸ்தர்களும் ஊழியர்களும் கேட்டுக் கொண்டதால் வரும் சனிக்கிழமை தொடக்கம் இவ்வைத்திய சாலை மீண்டும் இயங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாக யாழ் வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (லோ)

### அத்தியாவசியப் . .

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

தியாவசியப் பொருட்களான உணவு, மருந்து, எரிபொருள் போன்றவற்றை அனுப்பி வைக்கும்படி அரசாங்கத்திற்கு அவசர கோரிக்கை விடுத்த போதும் இதுவரை சாதகமான நடவடிக்கை எதுவும் அரசினால் எடுக்கப்படவில்லை.

கடல் மார்க்கமாக அத்தியாவசிய பொருட்களைக் கொண்டு வருவதற்கான ஆலோசனைகள் நடைபெற்றாலும் கொழும்பிலுள்ள அரசபீடம் கடல் மார்க்க ...

### ஓடுவதால் . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் ஒவ்வொருவரும் இப் போராட்டத்தில் பங்கு கொள்ள வேண்டும். நாம் சுதந்திரமாக வாழ வேண்டும். என்ற முடிவு 18 வருடங்களுக்கு முன் எடுக்கப்பட்ட தீர்மானமாகும் இனியும் காலம் தாழ்த்தக் கூடாது. நிதி ஒதுக்குவதுடன் மாத்திரம் நின்று விடாதீர்கள். வீட்டுக்கு ஒரு இளைஞனையாவது தந்துதவ வேண்டும். யாழ். குடா நாட்டில் 200,000 இளைஞர்கள் உள்ளார்கள். ஆனால் குடாநாட்டில் 1000 பேர்தான் எமது இயக்கத்தில் சேர்ந்துள்ளார்கள். குறைந்தது யாழ். குடா நாட்டில்5000பேர்வரை எமது இயக்கத்தில் சேரவேண்டும். எனவே எமது அணியில் சேர முன் வாருங்கள் எனவும் கோரிக்கை விடுத்தார்.

செ. குகாநந்தன் பேசுகை ...

பட்டது.

பொருட்கள் ரெயில் மூலம்

# காயமடைந்த அதிகாரிகளை பிரேமதாசாபார்வையிட்டார்

(கண்டி)

வடக்கு கிழக்கு பகுதிகளில் விடுதலைப் புலிகளுடன் மோதியபோது படுகாயமுற்ற நான்கு பொலிஸ் உயர் அதிகாரிகளை நேற்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசா சென்று பார்வையிட்டார்.

இவர்களுக்கு அவசியமானால் விசேட சிகிச்சை வழங்கப்படும் எனவும் அவர் கூறினார்.

# தமிழ் நாட்டிற்கு மேலும் 788 இல. தமிழ் அகதிகள்

(சென்னை)

இலங்கையில் இருந்து நேற்று 788 தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் மண்டப முகாமிற்கு வந்து சேர்ந்துள்ளதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுமார் 200 குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இருந்துசென்றுள்ளார்கள்

இவர்களுடன் மண்டபம் அகதி முகாம்களில் மொத்தமாக 4400 பேர் உள்ளடங்குவர் என அகதி முகாம்களுக்கு பொறுப்பாக இருக்கும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் யாழ். குடாநாட்டில் நடைபெறும் விமானத் தாக்குதலினாலும், உணவுத் தட்டுப்பாடு நிலவும் ஐயப்பாட்டினாலும் மேலும் அகதிகள் வருவார்கள் என தாம் எதிர்பார்ப்பதாகவும் அவ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## எல்லைப்புற ..

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

வத்தினர் உதவி செய்து வருகின்றனர். இதன் காரணமாக நூற்றுக்கணக்கான தமிழ் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

இராணுவத்தின் பாதுகாப்புடன் தமிழ் வீடுகளுக்குள் நுழையும் சிங்களக் காடையர்கள் அங்கு காணப்படும் பெறுமதி மிக்க பொருட்களுடன், நெல், மிளகாய் மற்றும் வேறு பல உணவுப் பொருட்களையும் திருடிச் செல்கின்றனர். (தி)

## திலகரட்னா ..

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

கள் மத்தியில் பேசுகையில் இலங்கை அரசின் நடவடிக்கைகள் குறித்து தனது கண்டனத்தை தெரிவித்த திரு. வாழப்பாடி இராமமூர்த்தி தற்பொழுது தமிழர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் இனப்படுகொலைகளை தடுத்து நிறுத்தும் வகையில் போர் நிறுத்தத்தை அறிவிக்குமாறு இலங்கை அரசை இந்தியா வற்புறுத்த வேண்டும் என்றும் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.


## வாடிக்கையாளருக்கு இடமாற்றம் பற்றிய அறிவித்தல்

இப்பொழுது உள்ள பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாக

**விக்கினேஸ் ரெக்ஸ்**

45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

எனும் முகவரியில் இயங்கிய எமது ஸ்தாபனத்தை

தற்பொழுது.

**விக்கினேஸ் ரெக்ஸ்**

78, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு மாற்றியுள்ளோம்.

B/1219


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 -ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 05 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படைவதால்உணவிற்கேபெரும் கஷ்டப்பட்டு வருகின்றார்கள்.

வடமராட்சியின் கரையோரங்களில் ஸ்ரீலங்கா கடற்படையினர் கரையோர மீனவர்களின் குடியிருப்புகளையும், மீன்பிடிப்படகுகளையும் அடிக்

ணம் வழங்கவேண்டுமென பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் அவர்களிடம் வல்வை மீனவர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (68)

## கொக்காவிலில்

# தொடர்ச்சியான ஹெலிதாக்குதல் மக்கள் வெளியேற்றம்

(கிளிநொச்சி)

தினமும் கொக்காவில் பகுதியில் ஹெலிகொப்டரிலிருந்து தாக்குதல்கள் நடாத்துவதால் பொதுமக்கள் பீதியடைந்து தமது வீடுகளைவிட்டு வெளியேறி ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடைந்து வருகின்றனர்.

நேற்று முன்தினமும் கூட தொடர்ச்சியாக ஹெலிகொப்டரிலிருந்து பாரிய குண்டுகள் வீசப்பட்டன. இதனால் பீதியடைந்த முருகண்டி, பழைய முருகண்டி, பன்னீச்சம்குளம், புத்துவெட்டுவான் பகுதி மக்களே இவ்வாறு அகதிகளாக வீட்டைவிட்டு வெளியேறி வருகின்றனர்.

புத்துவெட்டுவான் இராணுவ முகாமிலிருந்து காடுகளை நோக்கியும், கிராமங்களை நோக்கியும் ஷெல் அடிக்கப்பட்டு வருவதால் விறகு வெட்டிச்சீவியம்நடாத்திவரும் அப்பகுதி மக்கள் விறகுவெட்டி வியாபாரம் செய்வதைக்கூடக் கைவிட்டுள்ளனர்.

அன்றாடம் விறகுவெட்டிச் சீவியம் நடாத்திவரும் இப்பகுதி மக்கள் விறகுவெட்ட முடியாத நிலையில் உணவுக்குக்கூட வழியில்லாது பட்டினி கிடக்கின்றனர். (49)

## அம்பாறையில் ..

(1 ஆம்பக்கத்தொடர்ச்சி)

லெப்பை அமர்கான் என்பவரையும் கண்ட சிறிலங்கா இராணுவத்தினர் அவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் முதலாமவர் கொல்லப்பட்டார் மற்றவர் படுகாயமடைந்தார். (லோ)

## 17 ஸ்ரெச்சர்கள் ..

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

தேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி டாக்டர் கொன்ரெஸ்ரா வந்துசேராததால் இத்திட்டம் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

## செஞ்சிலுவைப் ..

(1 ஆம் பக்கத்தொடச்சி)

வெள்ளைக் கொடியும் பறந்துகொண்டிருந்தபோதே பலாலி இராணுவ முகாமில் இருந்த இராணுவம் அவ்வாகனத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

கொழும்புக்குச்சென்று திரும்பிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி திரு. கொன்ஸ்ரன் என்பவரை அழைத்து வரச் சென்றவர்களே ஸ்ரீலங்கா இராணுவத்தின் துப்பாக்கிப் பிரயோகத்திலிருந்து மயிரிழையில் உயிர் தப்பியவர்களாவர்.

கொழும்பிலிருந்து வந்தசர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி கொன்ஸ்ரன் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை விமான நிலையத்திலேயே தங்கியிருந்தார்.

## இராணுவம் ..

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

பிடித்து வைத்திருந்த அகதிகளில் இருபத்தெட்டு இளம் பெண்களை பாலியல் வன்முறைக்குள்ளாக்கி உள்ளனர். அத்துடன் அறுபதுக்கும்மேற்பட்ட தமிழ்பேசும் மக்களை சுட்டுக் கொன்றும் உள்ளனர்.

தொடர்ந்துசூரன்கல் பகுதியில் மூவாயிரம் தமிழ் பேசும் மக்களை ஸ்ரீலங்காபடையினர் பிடித்து வைத்துள்ளனர். மற்றுமொரு வழியால் சூரன்கல் பகுதியைநோக்கிவந்துகொண்டிருந்த படையினரை வழிமறித்து தாக்கியதில் பன்னிரண்டு ஸ்ரீலங்கா படையினர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து ரீ 52-2 ரக ரைபிள்கள் இரண்டு விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டது.

இதேவேளை தம்பலகாமம் பகுதியில் ஸ்ரீலங்காப் படையினர் மேற்கொண்டுவரும் விமானத்தாக்குதலைஅடுத்து திருக்கோணமலை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில்இருந்தும் அகதிகளாகி வந்து தங்கியிருந்த பல்லாயிரக் கணக்கான தமிழ் பேசும் மக்கள் தமது உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அருகிலுள்ள காட்டுப் பகுதிக்குச் சென்று உணவோ, தங்குமிட வசதிகளோ இன்றிஅவதியுறுகின்றனர்

இவர்கள் ஸ்ரீலங்காபடையினரின் தாக்குதல்களுக்குப் பயந்து அங்குமிங்குமாக இடம் பெயர்ந்து மீண்டும் மீண்டும் தாக்குதல்களுக்குள்ளாகி சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர்.

## இன்று மில்லர்

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

கேணி) ஆகியோரின் மூன்றாம் ஆண்டு நினைவுநாள் ஆகும். இவர்களின் நினைவஞ்சலி படம் நாளைய இதழுடன் இணைக்கப்படும்.

ளையும், செய்ய இந்தியா முன்வர வேண்டும்'' என்று பாரதிய ஜனதாக் கட்சியின் செயலாளர் திரு. ஜே. பி. மாத்தூன் இந்திய மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னையில் நிருபர்கள் மத்தியில் உரையாற்றிய அவர் மேற்கண்ட வேண்டுகோளை இந்திய அரசாங்கத்துக்கு விடுத்துள்ளதுடன்; உணவு, மருந்து உட்பட பல அத்தியாவசிய பொருட்கள் இன்றி இலங்கைத் தமிழ் மக்கள் அடையும் கஷ்டங்கள் குறித்து தனது ஆழ்ந்த கவலையையும் தெரிவித்துக் கொண்டார்.

இலங்கையின் இந்த இன அழிப்பு நடவடிக்கைகளை ஒரு முடிவுக்கு கொண்டுவரும் வகையில் இந்தியா இராஜதந்திர ரீதியில் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை தமிழர் பிரதேசத்தில் நடக்கும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் நடவடிக்கையில் இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒரு நிலைப்பாட்டைமேற்கொள்ள வேண்டும் என்று இந்திய மாக்சீச கம்யூனிட் கட்சி கூறியுள்ளதுடன்; இது விடயத்தில் சாத்தியமான சகல முன் நடவடிக்கைகளையும் இந்தியா மேற்கொள்ள வேண்டுமென்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

## திலகரெட்னாவால் ..

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

அரசுக்கு ஆயுதம் மற்றும்வெடிமருந்து உதவிகளும் அளிக்கப்பட்டுள்ளன என்று இந்தியா திரு. திலகரெட்னாவிடம் குற்றம் தெரிவித்ததுடன், இலங்கைஇராணுவத்திற்கு இவ்விரு நாடுகளும் பயிற்சி அளித்ததற்கான தக்க ஆதாரம் உண்டு எனவும் இப்பேச்சுக்களின் போது சுட்டிக்காட்டப்பட்டது

இந்தியாவின் இந்தக் குற்றச்சாட்டுகளால் தடுமாறிப் போன திரு. திலகரெட்னாவால் இந்தக்குற்றச்சாட்டினை அகற்றும் வகையில் ஆக்கபூர்வமான வகையிலோ அல்லது அழுத்தமாகவோ எவ்வித மறுப்போ உறுதியானபதிலோ வைக்கமுடியாமல்போய்விட்டதாகவும் இந்திய அரசியல் வட்டாரங்கள் மூலம் கூறப்படுகின்றது.

''இலங்கையின் வெளியுறவுச் செயலர் திரு. பெர்னாட் திலகரெட்னா இன்றுவியாழக்கிழமைவரை டில்லியில் தங்கியிருப்பார் என்றும்; இலங்கை நிலைமைகள் குறித்து இந்திய முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி உட்பட பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களையும் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவார்'' என்றும் தினமணி நாளேடு தனது செய்தியில் தெரிவித்துள்ளது.

வைத்திய சாலையை மீண்டும் இயங்கச் செய்வதற்கான யோசனையை பல வைத்திய அதி

## அத்தியாவசியப் ..

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

தியாவசியப் பொருட்களான உணவு, மருந்து, எரிபொருள் போன்றவற்றை அனுப்பி வைக்கும்படி அரசாங்கத்திற்கு அவசர கோரிக்கை விடுத்த போதும் இதுவரை சாதகமான நடவடிக்கை எதுவும் அரசினால் எடுக்கப்படவில்லை.

கடல் மார்க்கமாக அத்தியாவசிய பொருட்களைக் கொண்டு வருவதற்கான ஆலோசனைகள் நடைபெற்றாலும் கொழும்பிலுள்ள அரசபீடம் கடல் மார்க்கமாக உணவுப் பொருட்களைக் கொண்டு வருதலை முற்றாக நிராகரித்துள்ளது.

யாழ். அரச களஞ்சியங்களில் அரிசியோ, மாவோ கையிருப்பில் இல்லாமையும், அரசாங்கம் அத்தியாவசியப் பொருட்களை வடக்கு, கிழக்கிற்கு அனுப்பி வைப்பதாகக் கூறிக்கொண்ட போதிலும், வடமாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களிற்கும் உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்படாமை பற்றியும் இக் கலந்துரையாடலில் சுட்டிக் காட்டப்பட்டது. (மு)

எடுக்கப்பட்ட தீர்மானமாகும் இனியும் காலம் தாழ்த்தக் கூடாது. நிதி ஒதுக்குவதுடன் மாத்திரம் நின்று விடாதீர்கள். வீட்டுக்கு ஒரு இளைஞனையாவது தந்துதவ வேண்டும். யாழ். குடா நாட்டில் 200,000 இளைஞர்கள் உள்ளார்கள். ஆனால் குடாநாட்டில் 1000 பேர்தான் எமது இயக்கத்தில் சேர்ந்துள்ளார்கள். குறைந்தது யாழ். குடாநாட்டில்5000பேர்வரை எமது இயக்கத்தில் சேரவேண்டும். எனவே எமது அணியில் சேர முன் வாருங்கள் எனவும் கோரிக்கை விடுத்தார்.

செ. குகாநந்தன் பேசுகையில், நிதிப்பத்திரம் ஒரு திறைசேரி உண்டியல், வங்கி உண்டியல் போன்ற பத்திரம். அது எந்நேரமும் செல்லுபடியாகும் என்றார்.

தேவா பேசுகையில், இப் போராட்டம் நாகரிகமானவர்களுக்கும் அநாகரிகமானவர்களுக்குமிடையிலான போராட்டமென்று அரசாங்கம் கூறுகிறது. 1972இல் ஐந்துபேருடன் ஆரம்பித்த இயக்கம் இன்று பிரமிக்கத் தக்களவு. பரிணமித்துள்ளது. இவர்களைத் தான் அநாகரிகமானவர்கள் என்று அரசாங்கம் கூறுகிறது.


## தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் அறிக்கை

நாம் எதிர்நோக்கும் உணவுப் பிரச்சினையை சமாளிக்கும் முகமாக சகல விவசாய நிலங்களைப் பயன்படுத்தும்படியும், விவசாய விதைகளைக் கூடிய அளவு வைத்திருப்போர் 207, இராமலிங்கம் வீதி திருநெல்வேலி கிழக்கில் அமைந்திருக்கும் எமது காரியாலயத்தில் உங்கள் மேலதிக விதைகளைக் கொடுத்துப் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இதை உடனடியாகக் கவனத்தில்கொண்டு செயற்படுவீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

## இடம்மாற்றம்

**மகேந்திராஸ் அன் கோ.**

163, ஸ்ரான்லி வீதியில் இயங்கிவந்த எமது வாட்டப்பம் உறுப்புக்கள் தற்பொழுது பிரச்சினை காரணமாக சண்டிலிப்பாய் ராஜாஸ் கூல் முன்பாக மாற்றப்பட்டுள்ளது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

வில்லியர்ஸ், றொபின், வூசிலி வாட்டர் பம்
விற்பனையாளர்களுக்கு.

உரிமையாளர்,
நித்தியானந்தம்
S. மகேந்திராஸ் அன் கோ.
சண்டிலிப்பாய் மத்தி.

(B/1217)